**IN THE COURT OF THE I-ADDITIONAL DISTRICT COURT, RANIPET.**
**RANIPET DISTRICT.**

**DEPOSITION OF WITNESS**
**OS.No.26/2021- PW-1**

| | |
|---|---|
| Name | திரு.எம்.திருவேங்கடம் |
| Father Name | திரு.மாசிலாமணி |

Solemnly affirmed in accordance with the provision of Evidence Act X of 1872 on the day of **20.02.2026.**

**பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி:–**

2013–ம் ஆண்டில் என் மனைவியும், 1–ம் பிரதிவாதியின் கணவரும் கிரைய ஒப்பந்தப்பத்திரம் செய்து கொண்டார்கள் என்றால் சரிதான். அந்த கிரைய ஒப்பந்தப்பத்திரத்தில் எத்தனை பேர் சாட்சி கையெழுத்து போட்டுள்ளனர் என்று எனக்கு ஞாபகமில்லை. அந்த கிரைய ஒப்பந்தப்பத்திரத்தில் நானோ அல்லது என் பிள்ளைகளோ சாட்சி கையெழுத்து போடவில்லை என்றால் சரிதான். என்னுடைய ஊரும், பிரதிவாதிகளின் ஊரும் 15 கீ.மீ இடைவெளியில் உள்ளது என்றால் சரிதான். 2013–ம் ஆண்டு ஏற்படுத்தப்பட்ட கிரைய ஒப்பந்தப்பத்திரத்தில் கண்டுள்ள சங்கதிகள் எனக்கு தெரியும் என என்னுடைய நிரூபண வாக்குமூலத்தில் சொல்லியிருக்கிறேன் என்றால் சரிதான். வா.சா.ஆ.1 கிரைய ஒப்பந்தப்பத்திரத்தில் 2–வது பக்கத்தில் 2–வது நபரான என் மனைவி செல்வி, 1–வது நபரான ஆறுமுகத்திடம் கேட்கும் போது 3 வருட காலத்திற்குள் 2–வது நபருக்கோ அல்லது அவர் குறிப்பிடும் நபருக்கோ கிரையப்பத்திரம் எழுதிக்கொடுக்க வேண்டுமென சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். அவ்வாறு 2–ம் நபர் பாக்கி கிரையத் தொகையை கொடுத்து கிரையப்பத்திரம் பெற்றுக்கொள்ள தவறும்பட்சத்தில் 2–ம் நபர் செலுத்திய முன்பணத்தை இழக்க நேரிடுமென சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். 1–வது நபர் ஆறுமுகம் கிரையப்பத்திரம் எழுதிக்கொடுக்க முன்வராதபட்சத்தில் 2–வது நபர் செல்வி கிரைய பாக்கித் தொகையை நீதிமன்றத்தில் செலுத்தி, சட்டப்படி பரிகாரம் தேடிக்கொள்ள வேண்டும் என சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். இரு தரப்பினருக்குள்ளும் எந்த பிரச்சனை ஏற்பட்டாலும் கிரைய ஒப்பந்தப்பத்திரத்தில் குறிப்பிட்டுள்ள நிபந்தனைகளை இருவரும் ஒப்புக்கொள்வதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். கிரைய ஒப்பந்தப்பத்திரத்தில் குறிப்பிட்டுள்ள 3 வருட காலம் முடிவடைந்த பின்னரும் நீதிமன்றத்தில் பாக்கி கிரையத் தொகையை நான் செலுத்தவில்லை என்றாலும், உடனடியாக வழக்கு தொடரவில்லை என்றாலும் சரிதான். வா.சா.ஆ.1 கிரைய ஒப்பந்தப்பத்திரத்தில் பின்பக்கத்தில் ரூ.1,30,000/– செலுத்தியதற்காக எழுதப்பட்டுள்ள வாசகங்கள் யாரால் எழுதப்பட்டது என்று குறிப்பிடவில்லை என்றால் சரிதான். 1–வது நபர்

கிரையப்பத்திரம் எழுதிக்கொடுக்க தவறும்பட்சத்தில் 2–வது நபர் செலுத்திய முன் தொகையை வட்டியுடன் திரும்ப கொடுக்க வேண்டுமென கிரைய ஒப்பந்தப்பத்திரத்தில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். மாற்று பரிகாரமாக கிரைய முன் பணத்தை வட்டியுடன் பிரதிவாதிகள் செலுத்த வேண்டுமென கேட்டுள்ளோம் என்றால் சரிதான். கிரைய ஒப்பந்தப்பத்திரம் ஏற்படுத்தப்பட்ட தேதியிலிருந்து 7 வருடங்கள் கழித்து இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். 1–ம் பிரதிவாதி உமாதேவி என் மனைவியிடம் பலமுறை கிரைய ஒப்பந்தப்பத்திரத்தின் படி வழக்கு சொத்தை கிரையம் செய்து கொடுக்கிறீர்களா என்று கேட்டுள்ளார் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 கிரைய ஒப்பந்தப்பத்திரத்தை வரைவு தயார் செய்து அத்தாட்சி செய்தவர் என்று கையொப்பம் செய்துள்ள நபரின் முழு முகவரி குறிப்பிடவில்லை என்றால் சரிதான். அவரது ஊர் பெயர் மற்றும் உரிமம் எண் எழுதப்பட்டுள்ளது. வா.சா.ஆ.1 கிரைய ஒப்பந்தப்பத்திரத்தில் 5–வது பக்கத்தில் ஆற்காடு நகராட்சி என எழுதப்பட்டு பின்னர் அதை அடித்து காவனூர் ஊராட்சி என திருத்தப்பட்டுள்ளது என்றால் சரிதான். வழக்கு சொத்தின் சந்தை மதிப்பு 2013ல் இருந்ததை விட தற்போது உயர்ந்துள்ளது என்றால் சரிதான். பிரதிவாதிகள் கிரைய ஒப்பந்தப்பத்திரத்தில் கண்டுள்ள சங்கதிகள் படி கிரையப்பத்திரம் எழுதிக்கொடுக்க தயாராக இருந்தும் நாங்கள் தான் கிரைய பாக்கித் தொகையை உரிய காலத்திற்குள் செலுத்தாமல் காலம் கடத்தி 7 வருடம் கழித்து இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்றாலும், நாங்கள் கேட்டுள்ள முதன்மை பரிகாரம் கிடைக்காது என்பதால் தான் மாற்று பரிகாரமாக கிரைய முன்பணத்தை கேட்டுள்ளோம் என்றாலும், எங்கள் வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்றாலும் சரியல்ல.

<u>**மறுவிசாரணை:–**</u> இல்லை

BALAKRISHNAN Digitally signed by BALAKRISHNAN Date: 2026.02.20 16:13:13 -0500

I Additional District Judge,
Ranipet.